**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.111/2018</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் நாள் புதன்கிழமை பிரதிவாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | யுவசங்கர் | தந்தை பெயர் | : | பெரியசாமி |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 24.09.2025

**D.W. : 1**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனது அப்பா தமிழிலும் கையொப்பம் செய்வார் என்றால் சரியல்ல. ஆங்கிலத்தில்தான் கையொப்பம் செய்வார். தாவா A அட்டவணை சொத்து தொடர்பான வாசாஆ.1 ஆவணத்தில் என் அப்பா எந்த மொழியில் கையொப்பம் செய்துள்ளார் என்று தெரியாது. தாவா A அட்டவணை சொத்தின் அசல் மூலப்பத்திரம் என் கைவசம்தான் உள்ளது. அதை

தாக்கல் செய்யவில்லை. மேற்படி வாசாஆ.1 –க்கான அசல் ஆவணத்தில் என் அப்பா தமிழில்தான் கையொப்பம் செய்துள்ளார் என்றும், அதனால்தான் அதன் அசலை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பா ஆங்கிலத்தில் கையெழுத்து செய்ததைக் காட்ட பிவாசாஆ.1 ஐ தவிர வேறு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ,1 ல் என் அப்பா ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தார் என்பதைக் காட்ட அவரது ஆங்கிலத்தில் உள்ள கையொப்பம் அடங்கிய வேறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ,1 ல் உள்ள கையொப்பம் என் அப்பா பெரியசாமிபிள்ளையுடையதே அல்ல என்றால் சரியல்ல. 1998 ஆம் வருடத்திய வாசாஆ.10 க்கு சமமான அசல் உயில் எனது சகோதரர்களிடம் உள்ளது பற்றி தெரியும். 2004 ல் ஏற்பட்ட அதாவது வாசாஆ.11 க்கு சமமான அசல் உயில் என்னிடம் இல்லை. அந்த அசல் எனது சகோதரர்களிடம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வாசாஆ.11 ன் அசல் உயில் யாரிடமும் கிடையாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாசாஆ 11 ன் அசல் உயில் என்னிடம்தான் உள்ளது என்றும், அதனால்தான் அதை யாரிடம் உள்ளது என்று தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ.10, வாசாஆ.11 ஆகியவற்றின் அசல் உயில்கள் என்னிடமோ அல்லது எனது சகோதரர்களிடமோ தான் உள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ.10 உயிலில் எனக்குதான் வீடு, மனை மற்றும் மின்இணைப்பு, குடிநீர் இணைப்பு ஆகியவை எழுதப்பட்டது என்றால் சரிதான். வாசாஆ.10 ல் கட்டிடத்தை எனக்கும், காலியிடங்களை எனது சகோதரர்களுக்கும் என் அப்பா எழுதி வைத்திருந்தார். வாசாஆ.10

ன் படி எனக்குதான் அதிகப்படியான சொத்து ஒதுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதனால் பிரச்சனை ஏற்பட்டு எனக்கும், எனது சகோதரர்களான ராமகிருஷ்ணன், ராமசுப்ரமணியன் ஆகியோருக்கு சமமான அளவில் சொத்து ஒதுக்கப்பட்டு வாசாஆ.11 உயில் எழுதப்பட்டது என்றால் சரிதான். வாசாஆ.11 உயிலை 2004 ல் எழுதும்போது 1998 ல் எழுதப்பட்ட வாசாஆ.10 ரத்து செய்யப்பட்டது எனக்கு தெரியும். வாசாஆ.10 மற்றும் வாசாஆ.11 உயில்கள் எழுதிய போது எனது அப்பாவை யாரேனும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றார்களா என்றால் எனக்கு தெரியாது. வாசாஆ.10 , வாசாஆ.11 உயில் இருந்தது பற்றி அந்தந்த உயில்கள் எழுதப்பட்ட போதும் பின்னிட்ட உயிலில் முந்தைய உயில் ரத்து செய்யப்பட்ட போதும் எனக்குத் தெரியும். 2005 ல் ஏற்பட்ட வாசாஆ.12 உயில் முந்தைய உயிலில் எனக்கு குறைவான பங்கு ஒதுக்கப்பட்டதால்தான் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வாசாஆ.7 பதில் அறிவிப்பு எல்லோருக்கும் சேர்த்து நான் அனுப்பினேன். அதுபோன்ற வாசகம் அதில் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ.7 ல் எனது கையொப்பம் மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான்தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன். அதை மற்ற பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்றால் சரிதான். வாதிகளுக்கு தாவா சொத்தில் பாகம் கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்தில் நான்மட்டும்தான் இந்த வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு அதிக பாகம் வேண்டுமென்பதற்காக நான் மட்டும் இந்த வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல. நான் தனியாக வேறு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு இந்த சொத்தில் உரிமையிருப்பதாக நான்

வேறு பரிகாரம் எதுவும் கேட்கவில்லை. 2010 ல் எனது அப்பா இறந்தபிறகு வாதிகள் இந்த சொத்தில் அனுமதியின்பேரில் இருப்பதாக கூறி வழக்கறிஞர் அறிவிப்போ வேறு அறிவிப்போ எழுத்துமூலம் அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. 2005 ல் எனது அப்பா வாசாஆ12 எழுதியபிறகு 2006 ல் வாதிகள் சொத்திற்குள் வந்ததாக கூறும் நிலையில் என் அப்பா வாதிகள் அனுமதியின்பேரில் இருப்பதாக ஏதேனும் எழுத்துப்பூர்வமான ஆவணம் எழுதி வைத்துள்ளாரா என்றால் இல்லை. வாதிகள் சட்டப்பூர்வ வாரிசுகள் என்ற அடிப்படையிலும், சொத்தில் உள்ள உரிமையின் அடிப்படையிலும்தான் அங்கு வசிக்கிறார்கள் என்றும், அவர்கள் அனுமதியின்பேரில் அங்கு வசிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1 ஆம் வாதியின் கணவர் உயிருடன் இருந்தகாலத்திலும் அதன்பிறகு இன்று வரையிலும் வாதிகள் அந்த வீட்டில்தான் குடியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. தரைத்தளத்திற்கு போர்குடிநீர் வருகிறது. நான் தனியாக போர் போட்டுள்ளேன். வாதிகளுக்கு போர்குடிநீர் வருகிறதா என்றால் இல்லை. அந்த போர் வீட்டின் பின்புறம் உள்ளது. அந்த இடத்திற்கு வாதிகள் போக எனக்கு ஆட்சேபணையில்லை. வாதிகள் புது போர் போட ஆட்சேபணை உள்ளதா என்றால் வழக்கு நடப்பதால் ஆட்சேபணை உள்ளது. வழக்கு நடப்பதால் அவர்கள் அங்கு போக அனுமதியில்லை. வாதிகளை அங்கிருந்து காலி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் கீழ்யுள்ள போர் குடிநீரை அவர்கள் பகுதிக்கு செல்லவிடாமல் தடுத்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. பழைய போரில் தண்ணீர் இல்லை. புதிய போர் போட வாதிகள் கேட்டார்கள். வழக்கு நடப்பதால் நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். கனகராஜ் எனது

தந்தையின் ஒரு வாரிசு என்ற அடிப்படையில் அவருக்கும் இரண்டு அட்டவணை சொத்தில் பங்கு உண்டு என்றும், அதன்படி வாதிகளுக்கும் இரண்டு அட்டவணை சொத்துக்களிலும் பாகம் உண்டு என்றால் சரியல்ல. A அட்டவணை சொத்தை நான் அபகரித்துவிடலாம் என்ற எண்ணத்தில் B அட்டவணை சொத்தில் மட்டும் வாதிகளுக்கு பங்கு கொடுக்க தயாராக இருப்பதாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. A அட்டவணை சொத்தை ஒப்பிடும்போது B அட்டவணை சொத்தின் மதிப்பு மிகவும் குறைவு என்றால் சரியல்ல. A அட்டவணை சொத்தை அபகரிக்கும் நோக்கில் வாசாஆ.12 பொய்யாக தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்குரியப்படி இரண்டு இன சொத்துக்களிலும் பங்கு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.